# மனமே ஜகத்! ஷாந்!

## இதழ் ௨

பூஜ்யஸ்ரீ சத்குரு தூளி பாபா







# (4) பொறுமையின் பெருமை!

## முற்கவண நாசமும் ஆணுக்கு கற்காப்பு நாசமும் & அஹங்கார நாசமும்

ஆ..ஹ..ம்..வ..ழ!!!

சொன்ன கதை | சொல்லாத உண்மை!

தாம்பூல எச்சில் ஓர் அன்பர் தலையில் அறியாமையினால் ஒருவன் துப்பியதாகவும், இவர் திரும்ப திரும்ப (100 முறை) ஸ்நானம் செய்து வந்ததாகவும்; இவர் பொறுமையினால் அவன் அஹங்காரம் சர்வ நாசமானதாகவும்; பலமுறை சொல்லியும் இருக்கிறோம். நீங்களும் மடல்களில் படித்திருக்கிறீர்கள். இதன் மற்றோர் உண்மையை உள் ஆழவும்.

(A) அவனை ஏறிட்டுப்பார்க்காததால் மனக் குமுறலும்! முற்கவணமும்! நாசமாகிறது.



123

(B) ஏன்? எதற்கு? எனக்கேளாததால்

சொல்லும், செயலும், மௌனமாகிய நிலையால்,

தற்காப்பு நாசமாகிறது.

(காட்டிக் கொள்ளவும் இல்லை)

(C) தன்னை ஓர் பக்தனாகவோ, ஞானியாகவோ

கருதாததால், அவனே, ஓர் பிரபஞ்சனாக கருதும்

நாமரூப பேதம், சர்வ நாசமாகிறது.

(D) பரிபூரண சரணாகதியால், அவன் உமிழ்ந்த

தாம்பூல எச்சில் அசுசை & தவறு என தெரியவில்லை

(E) பரிபூரண சரணாகதியால், ஸ்நானம்

செய்தது சரியில்லை. மீண்டும் ஸ்நானம் செய்வாயாக

என பகவானே, நம்மை ஸ்நானம் செய்ய ஆணையிடுகிறான்

என்ற எண்ணம் பரிபூரணமானது.



124

F அவனை, ஏமாற்றிப் பார்க்காமலும், அவனை,
ஏன் என்று கேட்காமலும், அக்குற்றம்,
எம்முடையதே, எனை ஏற்றுக் கொண்டமையால்,
அஹங்காரம், அதிகாரம், ஆதிக்கம், அபிமானம்,
சூடு, சுரணை, லஜ்ஜை, வெட்கம், கூச்சம்,
தன்மானம், எல்லாம் சர்வநாசமாகி,
இது ஸ்ரீ பகவானின், அளப்பரிய கருணையே என்று,
பேரானந்த வெள்ளத்தில் மூழ்கிறேன்.


இதை கவனிக்கவும்.

ஏன்? எதற்கு? இப்படி செய்கிறாய்?
(நியாயம் பிறக்காது. கலகம் தான் பிறக்கும்) ← ஏன் கேள்வி கேட்பவி? வினவ தெரிந்தால்?
வாக்கு விரயம் தானே? வீண் வாதம் தானே?
பிரச்சனைகள் உருவாகும் தானே?





நிந்தகனை மதிக்கவில்லை தானே?
கௌரவம் பிரச்சனை தானே?
தற்காப்பு & முற்கவனம் தானே?
அவன் இன்னார்! நாம் இன்னார்! என்ற வேற்றுமை தானே?
அங்கும்! இங்கும்! எங்கும்! ஒருவன் தான் உள்ளான்
என உணராத் தன்மை தானே?
நம் பொறுமைக்கு இது ஓர் பரிட்சை!
என அடங்குதலே சாதனையாகும்.
ஏன்? எதற்கு? எப்படி? என்ற கேள்வி
எழுந்தால் அது சோதனையே ஆகும்.
எழுந்தாலே அது மனக்குறை/ தோஷ வாழ்க்கையாம்.
அம்மூன்று கேள்விகளும் எழாமல், எல்லாம்
நலமே/ எல்லோரும் நல்லவர்களே/ என்று ஏற்றால்
அது சோதனையையும், வேதனையையும் வெல்லும் சாதனையாகும்.






அன்பின் குடில் அனுபவம் ஒன்றை தருகிறோம்.

ஓர் நாள் மாடி/ வாக்கிங் செய்து கொண்டிருந்தது அந்த வைத்தியம்/ நேரம் 4-45 To 6 P.M. பெண்கள் கெஸ்ட் ஹவுஸ்/ ஒன்றில், வெளி விளக்கு (டியூப்) எரிந்தது. 6-30க்கு மேல் 7 மணிக்குள் விளக்கு எரியலாம். அது சரியான நேரம். அதற்கு முன் எரியலாகாது. உடனே எவரையும்/ எதையும்/ கவனிக்காமலும், கேள்வி கேட்காமலும், வெளி ஸ்விட்ச் மூலம் அவ் விளக்கை அணைத்தது அப் வைத்தியம். மறுமுறை வரும் போதும் அதே விளக்கு எரிந்தது. மீண்டும் எவ்விசாரணையும் இல்லாமல் அணைத்தது. மீண்டும்/ அவ் விளக்கு எரிய அதை அணைக்க. இவ்விதமாக 6 முறை (நடந்து கொண்டே) அவ் விளக்கை அணைத்திருக்கிறது.

இங்கு சலனம் இல்லை. சலிப்பில்லை. அருவருப்பில்லை. கோபம் ஆத்திரம் ஆவேசம் போன்ற, எந்த குணங்களும் தோன்றவில்லை. கூடாத நேரத்தில் விளக்கு எரிந்தால்,



127

அந்த அணைக்க வேண்டியது கடமையாகும்.

யார் போகிறார்கள்? எதற்கு திரும்பத் திரும்ப
போகிறார்கள்? ஏன் இப்படி வீணைக் போட்டு
போட்டு நேரத்தையும், மின்சாரத்தையும்
வீணடிக்க வேண்டும்? திரும்பத் திரும்ப
இந்த வறை செய்வது யார்? என்று வீண்
எண்ணம் தோன்றவில்லை. காரணம் மனம் இல்லை மாறாக
விளக்கு எரிந்தால் அணைக்க வேண்டும்.
என்ற ஒரு அர்ஜான் எண்ணத் தோற்றுவித்துக் கொண்டது.

குறிப்பு:- சோதனையும் வேதனையும்! நம்மை இப்படி
திரும்பத் திரும்ப
வந்தேகிறும் அதை பொறுமை கடைப்பிடித்து!
வெல்வதுவே சாதனையாகும்.





மறைந்த விசாரமும்! விகாரமும்!

விசாரணையின்றி தேவையற்ற

நேரத்தில், தேவை இல்லாதது எது

நடந்தாலும்! கிடைத்தாலும்!

உனக்குத் தேவையில்லை என்றால்,

அல்லது

ஒதுக்கப் பழகு! ஒதுங்கப் பழகு!

அக்காரியத்தை! ஏன்? எதற்கு? எப்படி?

என்று குழப்பம்? விசாரணை? கேள்வியின்றி?

மனதை சலிக்கவோ! சஞ்சலம் அடையவோ

வேண்டாதே!

குறை கூறுதே.

விளக்கு அணைப்பான் மூடிவில்; அந்த அறையிலிருந்து

ஓர் சிரிப்பொலி வந்தது. உன் தற்கவனத்தை!

பாராட்டுகிறேன் என்று ஓர் ஒலியும் வந்தது.

அதுவும் கண்ணனே! உங்கள் அறிய வந்திருக்காத எழுதப்பட்டது.




## மனவிருந்து

மனம் படைத்த மனித இனத்திற்கு மட்டும்:—
மனதின், எண்ணம், சொல்,
செயல்களினால் மனம் வதைக்கிறது.
அதன் வளர்ச்சியும், பலனும், மாயா,
உடையதாகும். என உணர்க. இம்மனதின்
அவசர வேகத்தினால், அம்மனம்
இதை உணர முடிவதில்லை. பிராப்தத்தின் படி,
வரும் எண்ணமும் வாக்கும், நாம் நேர மாற்றத்தால்
தடுமாற்றம் அடைகிறது. இம்மனதிற்கு,
சொந்த, பந்த, பாசப், பற்றினையும், பேராசை
கோபாவேசம், மோகமான வேசம், போட்டி பொறாமை
இவைகளாலும், தடுமாற்றம் உண்டாகிவிடுகிறது.



பிறருக்கு அறிவுரையோ! ஆறுதலோ! சொல்லும்
நிலை வந்தாலும், வாக்கை வீணடிக்காதே!
அப்படிச் சொல்லும் ஓர் பந்தம் வந்தாலும், அங்கு
இறை குரு! உணர்வோடு சுத்த நிதானம்
செய். உன் வாக்கு அங்கு வெளி வரும் விதி
இருந்தால், இதமாகவும்! பதமாகவும்! எளிமை
யாகவும்! சொல்லுவாம். வலிமை & கடுமை
கொடுமை & கடும்! வாக்கு வராமல் உன்நாக்கை
பாதுகாப்பதே, உன் சாதனையாகும்.
உனக்கும் ஓர் கொதிப்பு ஏற்பட்டு, நிலை தடுமாறும்
நிலை வருவதாக தெரிந்தால், உடனே நீ ஒதுங்கு.
நிலைவிட்டு அப்பால் செல். அவர்களை ஒதுக்காதே.
போதகம் சொல்லாதே.



31

இறைகுரு! உணர்வோடு எல்லாம் நீயென

நீ ஒதுங்கினால், நீ ஒதுங்கும் முன்னரே அங்கு

அவர்களாகவே, ஒதுங்குவர். காரணம் அங்கு

நீ வினைக்கு வித்திடவில்லை. வாக்கில்லை.

அவர்களும் விதைக்க முடியாது / அவர்கள் வாக்கும் அடைபடும்

இங்கு சந்தேக பயம் கூடாது.

(இருந்தாலும் அது மன திரள் சீர்மையை கூறோ

பேசுவார்களோ? செய்வார்களோ? விடமாட்டார்கள்

என்ற பயம்தி உன்னிடம் மாயையின் அவஸ்யம்

அது பவித்தமாகும் என்று உணர்

(அங்கு இறைகுரு உணர்வில் எனையுணர்)


பயமே பவிதம்! என்பது வைத்திய வாக்கதம்

இறைக்குரு உணர்வின் / சர்வார்ப்பணம்

உன்னிடம் இட உணர்வியின் அனுபவமாக இருந்தால்

அங்கு மனமே பயமி / அவஸ்யம் வராது.

அந்நியால் பற பற உன்னிடம் தந்தகரத்தைக் கொள்ளும்.



132

இதன் காரணம்?

நீ இறைதிருவுணர்வோடு! நீ அடங்கி

ஒடுங்கினால் மாயா வீழும் உன் முன்னே

உள்ள, எவரையும்! எதையும்! இயல்பாகவே

அடக்கி ஒடுக்கி வாழும். இதன் காரணம்?

நீ உன் வாக்கின் மன/பக்தி படிவில்

(அன்னியமாயில்லை)

அங்கு வேறு எவரும்! எதுவும்! உனக்கு முன்னை


வினை (வாக்கு) பக்திபட முடியாது இது உறுதி

இங்கு உன் பார்வையில் மட்டும், உனக்கு முன்

ஓர் உலகம் (நாம ரூப ஆக ஜீவ கோத்ரம்)


இருப்பதாக தோன்றும். நீ பக்தியில் வாக்கை

இழந்தால், உலகமும் உன்னை இழந்து வாழும் தெளிவது!




133

உன் எண்ணம்! சொல்! செயலால் தான்!
இந்த உலகம்! உனக்கு ஒளி அல் நாம
ருபத்துடன் இருப்பதைப் போல் தோன்றுகு
உன் வாக்கால்! வாக்கம் கொடுத்தும்
பிறர் வாக்கால் வாக்கம் பெற்றும்!
இது இன்னார்! இது இன்னது! பேசிப் பேசி
உன் வாக்கால் விதைத்தே! உலக
வினையின் பயனே! பலனே! உண்டு சுவை
ப்பது போல், மனமய பிராந்தி
மது மயக்கத்தில் சுழல் கிறாய்.
பேச்சைக் குறைத்து குறைத்து நிறுத்தப்
பழகிக் கொண்டால் உலகம் இல்லாமல்
மறைந்து விடும். இது மெய்




ஆத் வேதான், வாக்கை! விதை வாசலி!
என்றார்கள் அனுபவஸ்ரீ மஹான்கள்.
உன்வாக்கால் கொடுத்ததை வாங்குகிறாய்.
" வாங்கியதை கொடுக்கிறாய்.
அதாவது நீ விதைத்ததைத்தான் அனுபவிக்கிறாய்
அவனும் அவரும்! அவரவர் விதைத்
ததை! விகிதாச்சாரப்படி! பார
பட்ச தோஷமில்லாமல்! திட்ட
மிட்டதை திட்டமிட்டபடி! அதிஅதி
சிரத்தையாக ஒன்று விடாமல்
வந்தும் போயும்! கொடுத்தும் வாங்
கியும்! பேதபார்வையும்! விருப்பும் வெறு
ப்பும்! குற்றம் குறையுமே! வாழ்க்கையாக
மாயா மன சூழ்ச்சியால்!!!
மாட்டிக் கொண்டார்கள் என உணர்க.





வேண்டுமோ! விருப்பு வெறுப்போ
குற்றம் குறையோ!! மனம்
வசப்பட்டாலும், அனைத்து
பரிமாற்றமும்! வாக்கோல்தான்
என உணர்ந்தால் போதும்!!!
ஆகவேதான் வாக்கே வினை வாசல்
என்றார்கள் பெரு மஹான்கள். ஆகவேதான்
சொல்லும் பொருளும் அற்று!
சும்மா இருப்பதே சுகம்
என்றார்கள். இதன் பொருள் என்னவென்று
சொல் என்பது நாமம் ஆகும். பொருள்
என்பது ரூபம் ஆகும். உறவு! சுற்றம்
நட்பு! பண்டம்! பாண்டம்! பதார்த்தம்!






உன்னைக் காணும் அனைத்தும் (உன் மனம்)
பெயரும் பொருளும் பொருந்தியதுதானே? நாமம் ரூபம் தானே

இவை இரண்டையும் விவகரித்து சொல்வது உன் வாக்குத்தானே? உன் வாக்கு சொல்வதை யாவையும், பிறர் சொல்வதைக் கேட்டு கவிதை யாவையும், அவை நாமரூபம்! துலங்குமா? விளங்குமா? ஒருவருக்கொருவர் பரிமாற்றம் பண்ணப்படுமா? எனை உணர்ந்த ஜீவம் ஜடமாகி விடும். அதாவது;




நண்ணண ஆகிவிடும். என உணர்க.
இதில் ஓர் முக்கியம் என்னவென்றால்?
நாம ஞ்ப ஜக ஜீவ உறவு சுற்றம்
தோற்றம் தோற்றும் யோகும்
மனம் குண தோஷ வாக்காக இருந்து
வித்திட்டு புண்ணிய பாபத்துடன்
ஜனனமரணத்துடன் பிறையம்.
மேலே கூறிய அனைத்தும் பதுமைகளாக
மாறும் யேது அறிவின்றியில்
வாக்கு ஹத்திட்டு ஸத்திய தர்மமாக!
மெஞ்ஞானியில் பதஷக்கியாத
வியாமம். இதைக் குணவியாட்டாதும்.
ஜீவநியியாவில் மனம் வாக்கின் விதைவாசு வாகும்.




ஜகநிலையில் அறிவு! வாக்கின் விதை
வாசவாகும். பரமார்த்திக நிலையில்!
நிர்க்குணமாக பரிணமிப்பதால்.
அங்கு வாக்கும்! விதை வாசவும்! இல்லை.
இங்கு மண் என்ற ஒருணர்வுதான் உண்டு.
அதுவே நாம்! நாமே அது! என்ற
ஸ்வய அநுபூதி மட்டும்தான் உண்டு.
வாக்கில் (பேச்சில்) ஓர் இன்பம்!
தோன்றுவதால் மனம் மயங்கி விடுகிறது.
மது உண்டவண்டுபோல் வார்த்தை போதையில் என்னென்னவோ பேசுகிறோம்.
எண்ண பேசுகிறோம்? எதற்காகப் பேசுகிறோம்? எதைப் பற்றி
பேசுகிறோம்? ஏன் பேசுகிறோம்? நாம் பேசுவது நியாயமா? சரியா?
பேசிப் பேசியே நம் வாக்காலேயே பேசி! வினையை
விதைத்து ஜனனமரண சுழற்சியில் சிக்கிக்
கொள்கிறோம்.



கண் கண்டாலும் காது கேட்டாலும்; அதன் விளக்கம் வருவது வாக்கு வழியாகும். ஆகவேதான் வாய்க்கால் :- வாக்கு செல்லும் வழி.

இந்த வாக்கின் விதை வாசல்தான். ஸ்ரீ மஹான்கள் எப்படி சொல்கிறார்கள் என்றால்? வல்லான் வகுத்ததே வாய்க்கால்

அதாவது :- வாய்க்கால்! ஓர் நிலையில் சொல்லும் போது (கால்வாய்) பயிர்களுக்கு நீர் செல்லும் வாய்க்கால் ஆகும். லௌகீகம் & தெய்வீகம்! ஆகிய இருநிலைகளுக்கும்! வாய்க்கால் :- வாயின் வழியாக! :- வாக்கின் கால்வாய்! வழியாக (ஜீவம் செல்வதில்லை. வாக்கு விதை செல்கிறது.) விதை வாசல் வழியாக; புண்ணியபாபம் & ஸத்திய தர்மம்! ஆகிய விதை விதைக்கப்படுகிறது. லௌகீகத்திற்கு புண்ணிய பாப விதைகள் / விதைக்கப்படுகின்றன. தெய்வீகத்திற்கு ஸத்திய தர்மம்! ”.



(140)

இ வல்லான் வகுத்ததே வாய்க்கால்
என்றால், மாயாவும்
மனமும்! இணைந்ததே! உ
இந்த நாமரூப ஜகவியாபாரம் என்னாரி.

வெளிக்கமோ! தெய்வீகமோ! மனித
மனவாக்கு அப்பாமல் எந்த
ஆவது
நாமரூபகூடம் விளக்கும்
துவங்காது! விளங்காது என அறிக.
அதாவது?
கண் காணும்! காது கேட்கும்! அது
விளங்குவதும்! துவங்குவதும்!
நாமரூபகோந்நமும் அதன் அனுபவ விளக்கமும்!
வாக்கேயன்றி மற்றொன்றிலில்லை.
வாக்கு என்ற வார்த்தைகளால்!
ஒருவருக்கொருவர்! விளக்கங்களை
கொடுத்தும்! வாங்கியும் விருத்தி!
இல்லாத உலகை! உண்டு என நம்பிக்
கொண்டிருப்பது, மனமட்டமையாகும்
என இந்த நிறைவு செய்கிறேன்.
அருமையுடன்றே!
நடப்பது நலமே!

பாபா.




௫ ஹிமாலயாவிலிருந்து வந்த
ஓர் ஸ்ரீமஹாத்மா! முக்கியமான கேள்விகளைக்
கேட்டார். அதை உரையாடலாகத் தருகிறோம்.

ஸ்ரீமஹாத்மா :— அன்பான பாபாஜி! முதற்
கண் உங்கள் திருவடிகளை நமஸ்கரிக்கிறோம்
பின் சில கேள்விகளைக் கேட்கிறோம். அவை
உலகில் அனைவர்க்கும் பொருந்தும் கேள்வியே
உலகில் பற்பல மதங்கள் இருந்தாலும் அதில்
நான்கே பிரதானமாகக் கருதப்படுகிறது.

அவைகள் :— இந்துமதம், புத்தமதம்,
கிறிஸ்தவமதம், இஸ்லாமிய மதம், என
நான்காகும். இதை வைத்து எம் கேள்விகள்:
வேதம் ஒன்றா? நான்கா?

வைத்தியம் :— ஆதி வேதம் ஒன்றேயாகும்.
அவைகளை கலியுகத்தில் கடைப்பிடிக்க இயலாத்தன்மையில்
ஸ்ரீவியாச பகவான், கலியுகத்திற்காக
நான்காகப் பிரித்தார். அவைகள்!



ரிக் | யஜுர் | ஸாம | அதர்வண |
வேதம் என்பதாகும்.

ஸ்ரீமஹாத்மா :- இவை நான்கும் உலகில் காணப்படும் ப்ரபல மதங்கள் நான்கிற்கும் எவ்வாறு பொருந்தும் மஹாராஜீ?

வைத்தியம் :- ஓம் அருமை மஹாத்மாஜீ! கொஞ்சம் சிரத்தையுடன் கவனிக்கவும்.

இந்து என்பது, ம த ம் வி ல் எனவுணர்க.

ஆதி ஸ்ரீமஹான்கள், இந்து என்ற இந்த ஒலிக்கு ஓர்மை | என்றே அர்த்தம் நிருத்து கொடுத்தார்கள் என அறிக.

வேதம் :- ஒன்று / இந்து :- ஓர்மை!
ஆகும். என மட்டுமே உணர்ந்தான் காலப்போக்கில், நான்கு வேதங்களாக பிரிந்தது எனவும் அறிக.




143

① புத்ரமகம்! ரிக் வேதத்தில் நமக்கு சாதகமான! தியான யோகத்தை! மட்டும் ஏற்றுக் கொண்டது.

② கிறிஸ்தவமதம்! யஜூர் வேதத்தில் நமக்கு, சாதகமான ஆராதனைக் கிரமம்! மட்டும் ஏற்றுக் கொண்டது.


③ இஸ்லாமிய மதம்! ஸாம வேதத்தில் நமக்கு ஸாதகமான வெட்டவெளித் தியானம் மட்டும்! ஏற்றுக் கொண்டது. ஆனால் இம்மூன்றும் அதர்வண வேதத்தில் உள்ள சக்தி மிக்க மந்திரங்களை! மட்டும் ஏற்றுக் கொண்டன.



இம் மூன்று மதங்களும் கலியுகத்தில்!
தோன்றியதேயன்றி ஆதியில்
இல்லையென்பதே ஸத்தியம்.
இந்து என்ற ஓர்மைக்கு! வேதம்
என்ற; ஒன்றே! பிரமாணமாகும் என அறிக.

அவைகள்

1. பரம்! இறை! சொரூபமான விதம்.
2. இறைவன்! வசனம்!
3. (ஈசன்நிலை) அந்த இறைவனே! முறைப்படி வந்தனம் & வழிபாடுகள்! செய்யும் முறை
4. இறைநிலையை உணர்த்தும் வகையும் & லௌகீக கர்மாவும்! தெய்வீக கர்மாவும்!



மந்திரம் :- மந்திரம்.
தகடு :- மாயம்.

மந்திரஆர்வமாதவும்
எந்திர ” (தகடு)
உணர்த்தும் நிலையாகும். (பரிஹாரம்)

இவைகளே நான்கு வேதங்கள் ஆகும்.

எனஆதி ஸ்ரீமஹான்கள் வாயிலாக அறிகிறோம்.

ஸ்ரீமஹாத்மா :- இதை வைத்து மற்றொரு கேள்வி:
பொதுவாக மதவாதிகளால்! பேசப்படுவது
சொர்க்கம் ஒன்றேயாகும். ஆனால்
இந்துமதத்தில்தான் கைலாயம் & வைகுண்டம்
என்றும் இவைகள் முறைப்படி! சைவம் &
வைணவம்! என்றும் பேசப்படுகிறது.
ஆகவே இந்துவான ஒருவன்தான் இவ்விரண்டிற்கும்
செல்கிறான் என்றால்,

14-6



இ பெருமான்! சைவம் என்றும்
இ பெருமான்! வைணவம் ,,
மனம் படைத்த மனிதனின்
கற்பனையின் வேதமாகும்.

ஏனையோர்! அல்லது மற்றும் ஜீவர்கள்!
அதாவது மற்றும் மதத்தினர்! எங்கு
செல்கின்றனர்? அவர்களுக்கு வேறு உலகம்
உண்டா? சொர்க்கம் எவர்க்குரியது?
கைலாயம் & வைகுண்டம் எவர்க்குரியது?
இவைகளின் விளக்கத்தை அநேக விபரமாக
அருள வேணுமென்று பிரார்த்திக்கின்றேம் பரமா?
வைத்தியம்:- ஓர் உண்மையை உணரவேண்டும்
மண் என்பது தோற்றமும்! இரும்போடும்
கூடியதாகும். அதே போல்,
ஜலம் என்பது தோற்றமும்! இரும்பும்
இயக்கமும் அசைவும் கூடியதாகும்.
அக்கினி என்பது, மண்ணையும் ஜலத்தையும்
தோற்றக் கூடியதை! அதாவது



147

இ அக்கினி:- தோற்றம் இருப்பு, இயக்கம், என்ற நிலையில் மாற்றம் மறைவை உண்டுபண்ணுவதாகும்.

சிருஷ்டியையும், ஸ்திதியையும், ஸம்ஹாரம் என்ற நிலையில் ஓர் நாம மாற்றும் ரூபத்தை, எடுத்து, ஓர் நாமரூபத்தைக் கொடுத்து, பழையன கழிதலும், புதியன நிலைபெறுதலுமாகிய, கர்மாவை செய்கிறது. இம்மூன்று மேமெனக் கண்களுக்கு, தெரிவதாகும்.

காற்றும் & ஆகாயமும் அதிசூட்சுமமாகும். தெரியாததாகும்.

(A) ஆகாயத்தில் தான் மாயாவாபி தான் அனைத்து அண்ட ரண்ட பிண்ட சராச்சரங்களும் நாமரூப அனைத்து ஜீவ கோடிகளும்.

148



மண் களிமண்ணாகி
அதேது நாமரூபம்
பெறுவதற்கு ஜலம்
தான் காரணமாவதை உணர்க.

நீ உ வெ ஆ கி ன் ற ன !

காற்றில்தான் மேலேசுற்றிய (சுழல்கிறது)
அனைத்தும் சஞ்சாரம் செய்கிறது?

என முதலில் உணர்வு பூர்வமாக உணரவேண்டும்

(A) இனி முதலிலிருந்து கவனிக்கவும். உதாரணம்

மண்ணே பிரம்மம்! பிரம்மமே மண்ணாகும்!

இதுவே சிருஷ்டியின் ஆதாரம் ஆகும்.


மண்ணில்தான் ஜலம் நிற்கும். நிலபெறும்.

(B) ஜலம் தான் அசையும்! அசைவதைப்போல் தோற்றும்.

இதுவே ஸ்திதியின் மஹத்துவம் ஆகும்.

ஜலம் தான் ஜீவ ராசிப் பாகும்.

நாம ரூப தோற்றத்தின்! அடிப்படையாகும்.



149

உ அக்கினிதான், ஜீவத்தைத் தோன்றிய
நா ம ரு ப ஞ் க ரி ப் படைப்பையும்
காத்தலும், புதியன நிர்மாணித்தலுமாகிய
வி தி வ சு ஸம்ஹாரத்தை, நடையாவ்வமல்
ஒருமையில் வாமல் செய்கிறது என
ஆதி ஸ்ரீமஹான்களின் வாக்காக அறிகிறேன்.
மேலே கூறிய, இம்மூன்றும் மு றை யா க
ஸ்ரீபிரம்ம தேவன், ஸ்ரீமந் நாராயணன், ஸ்ரீசிவபெருமான்
என்ற திரிகர்த்தாக்களாகும் எனமட்டுமே அறிக.
(இவர்களுடைய, இருப்பிடங்களே, முறையாக
பிரம்ம லோகம், திருப்பாற் கடலாகிய வைகுண்டம்.
பனிசூழ்ந்த பனியாலான கைலாயம் என்பதாகும்.



150

வேறு எந்த மதத்திலும்
இனத்திலும் வேறு
எங்கும் செல்ல இடம் இல்லை
சொர்க்கம்! கைலாயம்! வைகுண்டமாவது

இவை முறையாக மண் & ஜலம் & அக்கினி!
என அறிக.

இவை முறையாக ஞானம் & பக்தி & கர்மா! ஆகும்.

ஆகவே ஞானத்தில் இருப்பிடம் இல்லை.

பக்தியிலும்! கர்மாவிலும்!

இருப்பிடம் உண்டு.

ஆ...கு...வே???

கைலாயம் & வைகுண்டம் என்ற இருஇடமும்!

இங்கு உழைத்து ஓய்ந்த பக்குவ ஆன்மாக்கள்

எவராயினும்! அனைவரும்!

எல்லா உலகத்தினரும்! எல்லா இனத்தினரும்!

இவ்விரு இடங்களையும் அல்லது கீழே உள்ள
சொர்க்கத்தில்தான் தங்கி ஓய்வுபெற வேண்டும்.
ஓய்வுபெற முடியும்.



151

இது ஓய்வுஸ்தவமேயன்றி! ஜீவன்முக்தி அடையாது.

புண்ணியம் செய்தால் சொர்க்கம் என்றும், ஸத்தியமாகிதை கர்மம் செய்தால் மேலே கூறிய (ஸத்திய தர்மத்தால்) பதமுக்தி! உண்டென்றும், இவ்விரண்டினையும் ஸத்குருகிருபை வென்றல்! மட்டும் ஜீவன்முக்தி உண்டென்றும் அறிக.

ஓர் உண்மை!

எந்த மூர்த்தியானாலும்! எந்த தெய்வமானாலும்! எந்த கர்த்தாக்களானாலும்! (புத்தர்! ஜீஸஸ்! நபிகள்! மற்றும் தேவ தெய்வங்கள்! தேவதைகள்) திருகர்த்தாக்களுக்கு! அன்னியமாயாவிது! என்பதே ஸத்தியம்.



152

இ மதவாதிகள்!
தெய்வத்தை பிரித்தனர்.
மனம் வசம் கொண்டோர்
ஜாதி மொழியைப் பிரித்துக் கொண்டனர்.

அதைப்போலவே சொர்க்கம்! கைலாயம்!

வைகுண்டம்! போன்ற பரமுக்திக்கு!

அன்னியமாய் வேறுபடுமுக்தியும் இல்லை.

ஒன்றே குலம்! ஒருவனே தேவன்!!

என்றறியாய், ஜாதி! இனம்! நாடு! மொழி!

என்ற எப்பேதமும் இல்லாமல்!


எல்லோரும் நல்லவர்களே! என்றும்

" நம்மவர்களே! "

நட்பே தெய்வமாய் நம்மே! தீமை இல்லா வேள்வி

என, உறுதி ஆனவர்களாக உங்கள் ஸ்வய

அனுபவத்தை வெளியிட்டு, ஸ்ரீசத்குரு கிருபையினால்!
மட்டும் ஜீவன் முக்தி பெறுவீர்கள்.





ஸ்ரீமஹாத்மா :- ஹே அன்பும்! அறிவும்! பணிவும்! கருணையும்! ஒருருவான எம் பாபாஜீ! இத்தனை உண்மைகளும் எம் உள்ளத்தில் பசுமரத்தாணி போல் பதிந்து விட்டன. இன்னமும் ஓர் சிறிய விளக்கம் தேவை? புத்தமதம் என்று உமது திருவாக்காலேயே ஓர் வாசகம் வந்து விட்டது. ஆனால் புத்தரானவர்! மஹாவிஷ்ணுவின் அவதாரமல்லவா? அது எவ்வழியில் பொருந்தும்? இந்த மதமாற்றம் ஏன் வந்தது? புத்தமதம் என யார்? யார்? எது எது? சொன்னாலும் பரவாயில்லை. தாங்கள் திருவாக்கால் வருவதே சத்தியமாகும். வஷிஸ்டர் வாக்கால் பிரம்மரிஷி பட்டம்! பெற்றது போலாகும் பாபா? தாங்கள் ஒருவர்தான் ஆதி குரு! வைத்தியம் இனைமாற்றித்து.

பொறுங்கள் மஹாத்மா! பொறுங்கள். இந்த பெரிய பெரிய வார்த்தைகளெல்லாம் இங்கு வேண்டாம். வார்த்தை என்பது ஓர் மாபெரும் காடு ஒருவன் உள்ளே புகுந்து விட்டானால், அவன் வெளியே வர இயலாது. தன்னையே இழந்து விடுவான் (இழந்துவிடுவான் என்றால் அஹங்காரம் மேலிடும்) மேலும் அதுவே வி தை பா சு பா கு ம்.





ஸ்ரீமஹாத்மா :- மன்னிக்கவேண்டும்பாபாஜி!
இதுவரை எவருமே வெளியிடாத உண்மைகளை
இப்படி ஸ்பஷ்டமாகவும்! எளிமை & இனிமை
யாகவும் எவரும் சொன்னதில்லை. அந்த ஆனந்த
மிகுதியால் அவ்வாறு அலம்பிவிட்டோம். இனியும்
அத்தவறுதனை பெருமன்னம் கருணைபுரியுங்கள்.
இனி எம் கேள்விக்கு விடையளியுங்கள் பாபா?

வைத்தியம் :- எல்லாம் நன்மைக்கே! எல்லாம்
அவன் செயலே! (அம்மஹாத்மா இடைமறித்தார்)

ஸ்ரீமஹாத்மா :- அவன்செயலென்றுவீர் எவன்
செயல்? அவன்யார்? நாங்கள் யார்? இப்படி
பேசாமலும் எம்மால் இருக்க இயலவில்லையே
பாபா? உண்மையை உணர்ந்தவருக்கு
பொய் தோன்றவில்லையே பாபா? எம்மை
மன்னிக்கவும். பேசாமலிருக்க எமக்கு இயலவில்லை
அதைக்கேட்க உமக்கு இயலவில்லை. ஆனால்
மெய்மை எப்படி பொருந்துகிறீர்! என்பது
மனம் படைத்த எவர்க்கும் உரைபுமையவில்லையே பாபா?
எ ம் மை ம ன் னி க் க வு ம் என




பிரக்ஞையற்று அவ்வைத்தியத்தின் திருவடியில்
விழுந்து விட்டார். அவ்வைத்தியமும் நிலை
தடுமாறி, குனிந்த நிலையில், அவர் பாதங்களை
மெல்ல மெல்ல வருடி, பாத சேவை செய்து
போகும்??? அந்த ஸ்பரிச மெய்யுணர்வால்!
கண்விழித்த அவர் :- இந்த சேவையை யாம்
செய்ய வேண்டியதிருக்க, தாங்கள் செய்கிறீர்
களே பாவமா? இதென்ன முறை? இதென்ன நியாயம்?
வைத்தியம் :- உடல் இரண்டானாலும் அங்கு
மெய்யுணர்வு! ஒன்றுதானே மஹாத்மா?
உடல் இரண்டு என்ற நிலையில் கேள்வி நிலையில் ஒன்று.
" " " " பதில் நிலையில் மற்றொன்று.
இவ்விரண்டும் பதுமைகள் என்ற நிலையில் ஒன்றுதான்.
" மனமயம் " " " .




ஏன் மனிதன் என சொன்னார்கள்
என்றால்?
மனிதன் ஒருவனே
நிசனமாகவாம்.
நீசனுமாகவாம்.

ஸ்ரீ மஹாத்மா :- நாஸ்திகளிடம் குதர்க்க வாதம்
இவ்வாமல் ; அனுபவ விளக்கத்தில்;
எவர் பேசி வென்றார் கொண்டுமுடியும் பாபா?
வைத்தியம் :- வார்த்தையை குறைத்துக்குறைத்து
நிறுத்தவும். இனி அனுபவ விளக்கத்தை பெறவும்.
ஓம் அருமை மஹாத்மா! இக்கலியுகத்திற்காக
தான் விஷ்ணுவின் ௰ அவதாரமும் கூறப்பட்டது.
மற்ற யுகங்களில் அது இல்லை. தேவையுமில்லை.
அப்படி சொன்ன ஸ்ரீமஹாத்மாக்களே! சொன்ன
விபரம் :- மீன்! ஆமை! பன்றி! நரசிம்மம்!
வாமனன்! பரசுராமன்! ஸ்ரீராமன்! ஸ்ரீகிருஷ்ணன்!
புத்தர்! கற்கி! என, பக்தாஸ் என அறிக.
இவை பக்தியில் எட்டு உறையில்; ஓர்
மனித மனம் படைத்த ஜீவன்! எப்படி
ஆன்ம வளர்ச்சி அடைகிறான் என்பதை உணர்த்துகிறது.



அவை முன்பே மடலில் கூறப்பட்டது

ஒன்பதாவது புத்தர்! தியான யோகத்தை!
கடைப்பிடித்ததாலும்; அதை ஒரு சாரார்
பின்பற்றிய நிலையில்; புத்த மதம்! ஆகிவிட்ட
தன்மையாலும்; அதை ஏற்க மறுத்த, இந்த
வைணவர்கள்! மட்டும்; புத்தரை ஒன்பதாவதாக
சேர்க்காமல் ஒதுக்கி விட்டு, கிருஷ்ணனின்
அண்ணனை பலராமனை! ஒன்பதாக்கி விட்டார்கள்.
இது மதப்பிரச்சினையால் பிரிந்ததன்றி;
உண்மையில் புத்தரே! ஒன்பதாவது அவதாரம் என உணர்க.
10வது கல்கி அவதாரம் இல்லவே இல்லை " "
கடும் சுடும் வாக்கு உங்கால் நீயே கலியுகம்.
நீயே கற்கி! நீயே கலி தேவன்.




சர்வார்ப்பணர் நிலையில்! இறை உணர்வோடு

அழுகுவாக்கு வந்தால் நீயே குறிக்கிட!

என ஆதி ஸ்ரீ மஹான்களின் வாக்காக அறிகிறோம்.
அம்மஹாத்மாவே மற்றுமொரு கேள்வி கேட்டார்?

ஸ்ரீ மஹாத்மா:- அன்பும் அறிவும் ஒருருவான எம்பாவா!

சித்த சுத்தியினால் தான்! ஞானம் பெற முடியும்!


என்பது, அத்வைத வேதாந்திகளின் கருத்தாகும்.

① சித்தாந்தம்! என்பது என்ன? சித்த சுத்தி!
என்பது என்ன? தனித்தனி விளக்கம் தேவை?

② சித்தசுத்தி! அடைவது எப்படி? சித்தசுத்தி!
அடையவில்லையானால் சாதகன் நிலை என்ன?

③ மனம்! புத்தி! சித்தம்! ஆகிய இம்மூன்றும்;
ஒன்றுகக் கொள்ளலாமா? கூடியதா?

④ ஸித்தே! சித்தமான நிலை என்ன? ஆகிய இந்
நான்கு கேள்விகளுக்கும் விடை வேண்டும் பாபா?



159


வைத்தியம் :- (முதலில் கேள்வி) சித்தாந்தம்
என்பது என்ன? சித்த சுத்தி என்பது என்ன?
தனித்தனியே விளக்கம் தேவை?

பதில் :- சித்தாந்தம் வேறு! சித்த சுத்தி வேறு!
என்பதை முதலில் கொள்ள வேண்டும்.

(A) சித்தாந்தம் :- இது விசிஷ்டாத்வைதம்! ஆகும்.

இது த்வைதநிலையை தாண்டிய நிலையாகும்.
இங்கு நாம ரூப / ஸ்ரீபகவான் ஐக்கியத்வம்
பெறுகிறான் என உணர்க. (இது சித்தத்தின் வேலையாகும்)
இங்கு த்வைத நிலையில் ஸ்ரீபகவான் வேறு!
பக்தன் வேறு! எனக் கூறப்படுவதாகும். இதில்
(ஏ ஆமான்)
ஸ்ரீபகவான் :- ஆண்டான்! பக்தன் :- அவன் அடிமை
ஸ்ரீபகவான் :- கணவன்! பக்தன் :- அவன் மனைவி.
என ஸ்ரீபகவானையும்! பக்தனையும்! வேறுபடுத்துவதாகும்.

160



சித்தத்தின் செயல்:-
துவைதம் ஆகும்.
சித்தாந்தத்தின் செயல்:-
விஸிஷ்டாத்துவைதம் ஆகும்.


இதன் தீர்ப்பு என்னவென்றால்?:- பக்தன் பக்தன்தான்! ஸ்ரீ பகவான் பகவான் தான்.

ஏனது துவைத வேதத்தை! காண்பிப்பது சித்தத்தின்! செயலாகும்.

சித்தாந்தம் என்பது:- ஸ்ரீ பகவானும் அவனுடைய பக்தனும் விஸிஷ்டாத்து வைதமாகும் ச ம மா க வா ம். அதாவது சம அந்தஸ்துள்ள பதவியாயிருப்பது போல! சமமாகவாம். ஆனால் ஸ்ரீ பகவானும் பக்தனும் ஒன்றாக முடியாது!!!

அதாவது அத்வைதத்தில்! பெற முடியாது.

பகவான் பகவான்தான். பக்தன் பக்தன் தான்.
சமமே தவிர ஒன்றல்ல! எனக் கூறு அகலம்.




ஸ்ரீ பகவத் பக்தியினால்
ஒருமித்த மனதுடன் (161)
பூஜை! அபிஷேக! ஆராதனை
ஆரத்தி! பஜனை! கீர்த்தனை
ஜபதபத்தாலும் சித்தசுத்தி
பெறுவோம். சித்தசுத்தியால் புத்திசக்தியோ! பரசக்தியோ!
அடைவதே லட்சியமாகக் கொள்ள வேண்டும்.

(B) சித்த சுத்தி:- கண்! காது! நாசி! வாக்கு! ஸ்பரிசம்! ஆகிய இவ்வைந்தின்! ஒழுக்கக் கட்டுப்பாடே! சித்தசுத்தி ஆகும்.

(2) கேள்வி:- சித்த சுத்தி அடைவது எப்படி? சித்தசுத்தி அடையவில்லையானால் சாதகன் நிலை என்ன?

பதில்:- மேலே கூறிய பஞ்சேந்திரியங்களின் ஒழுக்கக் கட்டுப்பாடே சித்த சுத்தி ஆகும். மேலே கூறிய ஐந்தும் வெளியே இன்ப நுகர்ச்சிக்காக செல்லாமல்; அக உணர்வாக அதாவது, ஆன்ம உணர்வாக! அல்லது இறை உணர்வாக அதாவது, ஆன்ம இறை! ஆனந்த உணர்வாக, செலுத்தப்படுவதே! சித்த சுத்தி ஆகும்.

ஜெ




அப்படி சித்தம் சுத்தம் செய்யப்படவில்லையானால்
அவன் போகியும்! ரோகியும்! ஆவான்.
அவன் பிறந்த பிறவியின் பயனை இழந்தவனாகிறான்.
அவன் சித்த சுத்தி செய்யப்பட்டு விட்டானானால்
பக்தனும்! யோகியும்! ஞானியும்! ஆவான்.
இவன் பிறந்த பிறவியின் பயனை அடைந்தவனாகிறான்.

௨ கேள்வி:- மனம்! புத்தி! சித்தம்! ஆகிய இம்மூன்றையும், ஒன்றாகக் கொள்ளலாமா?

பதில்:- ஒன்றாகக் கொள்வதுதான் உத்தமம்.

ஆனால் இம்மூன்றும்: நாமரூப! தோஷ குண! புண்ணிய பாப! வினையின் அஸ்திவாரமாக அமைகிறது என்றுணர்க.
இவை மூன்றும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகளே.

163



இம்மூன்றின் செயல்பாட்டை சுருக்கமாக உரைக்கவும்

A. மனம் :- தோற்றமும்! இருப்பும்! உடைய ஓர்வொருவருக்கு (இயற்கைக்கு) செயற்கை நியதியால், ஓர் நாமமும் உருவ அமைப்பும்! கொடுத்து இது இன்னது! இது இன்னார்! என ஓர் நாமம் வழங்குவது மனமாகும்.

B. புத்தி :- மனம் நாமம் இட்ட அப்பொருளை! இனம் இனமாக! ரகம் ரகமாக! விதவிதமாக! நாமங்களைக் கொடுத்து இனம்! ஜாதி! மொழி! நாடு! மதம்! எனக் கொடுத்து, கொடுத்து; பிரிவு வேற்றுமையை! உண்டு பண்ணியது; புத்தி ஆகும்.



# இதழ் ௨

**வெளியீடு :**

அன்பின் குடில்,
253/1, மேட்டூர் - பவானி மெயின் ரோடு,
கோம்பூர், நெரிஞ்சிப்பேட்டை,
பவானி தாலுக்கா, ஈரோடு மாவட்டம்,
தமிழ்நாடு - 638 311
தொலைபேசி : (04256) 227655

முதற்பதிப்பு : அகண்டஜோதி யாத்திரை வெளியீடு
செப்டம்பர் 27, 2011

பிரதிகள் : 350

அச்சிட்டோர்:
ஆரித்ரா பிரிண்டர்ஸ்,
பெங்களூர் - 560 003.
தொலைபேசி : (080) 23346025

## பொருளடக்கம்


1. தெய்வம் தோன்றாத் துணைவன்
   தெய்வம் மனுஷ்யானாம் 84
2. உலக சேவையால் பெறுவது 92
3. ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸரும் ஸ்ரீரமண பகவானும் 98
4. பொறுமையின் பெருமை 122
5. ஹிமாலய ஸ்ரீமஹாத்மாவின் கேள்விகள் 141


எல்லாம் நீ!



(84)

தெய்வத்தை நிந்தித்தால்
தெய்வம் இவனை கைவிடுவதில்லை
கருணையே தெய்வம். தெய்வமே கருணை
(இவன் தெய்வ அம்சமாக இருக்கிறான்).

ஆகவே தான் தெய்வம் நேரில் தோன்றாததில்லை.

(1) என்றும் தெய்வம் மனித வடிவில் தான் தோன்றும்.


என்றார்கள். ஏன் தெய்வம் மற்ற வடிவங்களில்
தோன்றாதா? தோன்ற முடியாதா? தோன்ற இயலாதா?
என ஓர் கேள்வி எழலாம்? அவசியம் தோன்றும்.

இதன் காரணம் என்னவென்றால்? — மற்றும்
நடப்பன, பறப்பன, நீந்துவன, ஊர்வன,
ஆகிய 84 லட்சம் ஜீவ வடிவிலும் தோன்றும்.

(A) அங்கு மனம் இல்லை. ஆனால் அறிவு (ஆன்மா)
உண்டு. (B) அவைகளின் பாஷைகள்.
மனிதனுக்குப் புரியாத புதிராகவே (இருக்கும்).
(C) அவைகளை மெய்யுணர்வால் தான் உணர முடியும்.
(D) உணர்ச்சிகளுக்கு அடிமையான மனிதனால், இதை



உணரவும்! அறியவும்! தெரியவும்! முடியாது.
ஆனால் அவ்வழி வந்தருளியும்
தெய்வம் வரும். வந்தே ஆகவேண்டும்.
ஆனால் கண்டுகொள்ளும் திறமை/மனதுக்கில்லை.
காரணம் சபலம்/சலனம்/சந்தேகம்/ஆகும்.
இவை மூன்றும் நாசமாக வேண்டுமானால்: நம்பிக்கை ஒன்றே மூலமாகும்.
ஆகவேதான் நம்பினார் கெடுவதில்லை என்கின்றனர்.
நம்பிக்கை வர விடாமல் தடுப்பது எதுவென்றால்!
[illegible] உறவு/சுற்றம்/நட்பு/பொன்/பொருள்/போக
மனக்கிளைமையான் மயக்கமாகும் என்றுணர்க.



அந்த நம்பிக்கையை பெறுவதென்றால்:

நாமரூப ஜகஜீவ! தோற்றமும்! அவற்றின் இருப்பும்

அவைகளின் இயக்கமும்! பின்மாற்றம் மறைவும்!

இதனைத் தோன்றும்; இன்பமும் துன்பமும்! நிலை

இவ்வகைத்தானே? எல்லாம் மனம்! வினை! விதி!

எனச் சொல்லி; திட்டமிட்டுத் தயாரிக்கப்பட்ட.

ஓர் பொம்மலாட்டம் தானே? முடிவில்

மண்மயம் தானே? மண்ணாகிய

பரமே! பரமாகிய யாமே! என்ற உறுதியின்


திட நம்பிக்கை வேண்டும்

இந்த திட நம்பிக்கை! சாமான்யமாக வருவதில்லை;


காரணம் நாமரூப! ஜக ஜீவ! இனிமையின்

மயக்கத்தின் பழக்க வழக்க தோஷமே

ஆகும் என ஸ்ரீ மஹான்கள் சொல்வர்.



பொதுவாக இந்த ஒரு எண்ணத்தை உறுதி பூண்டால் போதும். நாம் ஒரு ஜக ஜீவ! தோற்றங்களும், பொன் பொருள் போகங்கள் அனைத்தும்! நேற்று வந்தது. இன்று இருக்கிறது. நாளை இராது. என்றிட உணர்வின் நம்பிக்கை! மனிதனைப் பேரவா அசைக்க முடியாமல் இருக்க வேண்டும். அந்த நம்பிக்கை பெரு சர்வார்ப் பணம் ஒன்றே! இக்கலியில் உறுதுணையாகும். அக்கவசகரன், நம்பினோர் கெடுவதில்லை! என்ற சத்திய வாசகத்தை ஸ்ரீமகான்கள் சொன்னார்கள்.




இந்த மெய்யுணர்வு எப்படிவரும் என்றால்

நீ தேவி பரம் காண்க.

(1) தாவாதீத பரத்தை :- அகண்ட சமுத்திரமாகவும், அல்லது அகண்ட பாலைவனமாகவும் (உதாரணம்) எடுத்துக்கொண்டோமானால் அது தாவாதீத பரத்தை ஒரே தோற்றத்தை மட்டும் உடையதாக கொள்ள வேண்டும். வேறு எந்த விளக்கமும் இல்லை. அதை சதாசிவம் என்றும் சொல்லலாம்.

(2) மஹேசன், ஹயன், ஹரி, ஹரன், என்ற நிலையில் கூட அளவுள்ள ஜீவமாகவோ அல்லது பாறைகளாகவும், தெளிரும் நிலையில் தோற்றமும், இருப்பும் உடையதாம். இது யோகமாயா சம்பந்தம், கொண்டதாகும்.






3 பிரம்மதேவன்! நாராயணன்! சிவபெருமான்!
அவர்கள் தோற்றம்! இருப்பு!
இயக்கம்! கொண்டநிலையில் அவர்கள்
ரூப நாமத்துடன் கூடியநிலை
யோக மாயா! சம்பந்தகம் கொண்டதாகும்.

2 வகை பரநிலை என்றும் 3 வகை ஈசன்நிலை என்றும்
கொள்ளவாம் 1 வகை ஒன்றிலும் சேர்க்க
முடியாது! கூடாது!! இயலாது!!!

4 தோற்றம்/ இருப்பு! இயக்கம்/ மாற்றம்!
(பரம்) X (யோகமாயா) (யோகமாயா & ஈசன்) (நாமரூப மாற்றம்)
மறைவு! (பழையன கழிதலும், புதியன தோன்றுதலுமாகிய மாற்றம்)



90

மனித ஜென்ம உடம்பட! ஜீவ பக்ஷம் ஜீவகோடிகளும்

புண்ணிய பாவம் என்னும் ; இருவினையால்!

பின்னிப் பிணைந்து ; போக்கு வரவு!

என்றநிலையில் ; தொடுக்கல் வாங்கலாக

கர்மா! பரிமாற்றம்! பண்ணும் நிலையாகும்.


இவை எப்படி பின்னப்பட்டுப் பிணைகிறது என்றால் ;

காலாதீத பரத்தால் மாயாவும்! மாயாவால்

அம்சனும்! அம்சனால் ஜீவனும்! இறங்கி

வந்த நிலையில் ; மனதால் குணமும்!

குணத்தால் வினையும்! வினையால் விதியும்!



௮

ஹரியால் ஜனன மரணமும் உண்டாகிற

தை, ஆதி ஸ்ரீ மஹான்கள் வாக்காக அறிகிறோம்.

அதாவது முடிந்த முடிவாக :- கா வா தீ த

யோ

பரம்! குமாயா! ஈசன்! என்ற

ஸ்ரீ பகவான்! லோக மாயா

மணம்! குணம்! விக்ஷ்வித

புண்ணிய பாப ஜனன மரண

சூழல்! என தோற்றமாக்கிரமமாய் தோற்

றுவதெல்லாம். பொம்மலாட்டமே!

எல்லாம் மண்மயமே! என தெளிந்து

எல்லாம் ஒன்றே! எல்லாம் மண்ணே! மண்ணாகிய

பரமே! பரமாகிய நாமே! நாமாகிய பரமே!

என்ற திட நம்பிக்கையின் வைராக்கியம் வேண்டும்.

உன்னைவ் முடியும். கு. பாபா.



## ௨ உலக சேவையால் வரும் அறிவு.

உலகம் உன்னை ஒதுக்கிறப்போதான் அவன் உன்னைச் சேர்வான்.

Ⓐ உலகை (ஜீவர்களை) நீ கண்டுகொள்ளாதே!

Ⓑ அவ்வுலகமும் உன்னைக் கண்டுகொள்ளாது!

(உலகம் (ஜீவர்கள்) உன்னைக் கண்டுகொள்ளாமலிருக்கும்)

Ⓒ அவன் (ஸ்ரீபகவான்) உன்னைக் கண்டுகொள்வான்!

(அவன் மாயா உன்னை கருணையுடன் ரக்ஷிக்கும்)

### ஓர் சிறிய விளக்கம்.

Ⓐ உலகை (ஜீவர்களை) நீ கண்டுகொள்ளாதே!

எவரையும்! எவைகளையும்! கண்டுகொள்ளாதே!

கண்டிக்காதே! தண்டிக்காதே! பழிக்காதே!


பகைக்காதே! குற்றம் குறை காணாதே! தூஷிக்காதே!

துன்புறுத்தாதே! (நல்லவன் கெட்டவன்! நல்லது கெட்டது என்று) பேதம் காணாதே! வெறுக்காதே!

அவ்வுலகமும் உன்னை:- கண்டிக்காது. கண்டுகொள்ளாது.

தண்டிக்காது. பழிக்காது. பகைக்காது. குற்றம் குறை காணாது.

தூஷிக்காது! துன்புறுத்தாது. பேதம் காணாது. வெறுக்காது.



B

உன்னை விட்டு உலகம் ஒதுங்கி விடும்.

,, ,, ஒதுக்கி. ,,

,, ,, ஏறிட்டுப்பார்க்காது

உலகம் உனக்கு உபகாரம் செய்யாது.

உன்னை உலகம் கண்டுக்காது. கண்டிக்காது.

ஓ உலகம் உன்னை கண்டு கொள்ளாது ஒதுக்கிவிட்டால்

உன் தாவ பிராரப்த கர்மாவை!

(முடித்தே ஆகவேண்டும்)

மாயா (ஸ்ரீ பகவான்) முடிக்கும்.

உன் சர்வார்ப்பணம் உறுதியாக இருந்தால்

ஆகாமிய & வழியும் கர்மாவும் தொடராமல்

உலகம் (உன்னை) விட்டால் தான் மாயா நீங்கும்.

உலக இனிமையில் மயங்கினால் மாயா பொறுப்பில்லை.


ஓர் முக்கியம்.

மனம் கர்மாவை ஏற்றால்; கஷ்டம்! கவலை! துன்பம்!

துயரம்! கலக்கம்! மயக்கம்! பயம்! தோல்வியும்.




மாயா! கர்மாவை ஏற்றுவீர் :- தோஷ குண
(முன்கூறியவை)
ங்கள் உன்னை ஆட்படுத்தாது. அது ஓர்வித சுகமாக
வும்! ஆனந்தமாகவும் தோன்றும். இங்கு அவஸ்யம் நீ
மனோபாரம்! இவ்வாறிவை உணர்வாய்.
இதன் காரணம்? (முடிவுறுவது காரியம் முடிப்பது காரணம்)
மாயா! காரணம் ஆகும்.
மனம்! காரியமாகும். என உணர்க.
இங்கு ஓர் முக்கியத்தையும் நீ உணர்வாய்.
நீ உவருக்கு நன்மை செய்தால் அவ்வுலகமே
உனக்கு ஓர் நன்மையை செய்யும்.
ஒருவர்க்கு நீ உபகாரம் செய்தால் அவ்வுபகாரம்
உனக்கு திரும்பவும் கிடைக்கும்.
மக்கள் சேவையே மகேசன் சேவையென நீ
சேவை தொண்டு செய்தால் இவ்வுலகமும்
உனக்கு சேவையும் செய்யும். உன்னைப் புகழும்! என
கொண்டாடும்! போற்றும்! தொண்டன் ஸ்ரீ உதயன்



95

நான் தலை மேல் தூக்கி வைத்து ஆடும்.
அ(முடிவில் கீழே போட்டு மடக்கும்)........து?


கர்மாவின் பிறப்பாகும். முன் கணக்கு பதிவு
என, பற்று வரவு! இவ்வாழ்வில் இது நடைபெறும்.
இங்கு ↑ கொடுத்ததைத் தான் வாங்குகிறாய்.
வாங்கியதைத் தான் கொடுக்கிறாய்.
இரண்டும் ஆகாமியம்! நான் எனது! பின்னலும்.
வேகத்தால் வலிய கர்மா தொடர்வரும்.
உன் சர்வார்ப்பணத்தால்
வாங்கியதை கொடுத்தாலும்! கொடுத்ததை வாங்கினாலும்!
ஆகாமியம்! பின்னிடாது. வலிய
கர்மாவும்! தொடராது ஓடிவிடும்.
மனம் எண்ணியதைத்தான் மாயா! செய்யமுடியும்.
இங்கு உன் சர்வார்ப்பணத்தால்! நீ ஏ. சன்நிலை
பெற்று மனம் அறவாகி! விட்டபடியால்.
மாயா உனக்கு கீழ்உள்ள ↓ நிலையை! அடைந்து விடுகிறது எனமட்டுமே உணர்க.



96

அன்பே மனோபாரம் (துன்பம் துயரம் கஷ்டநஷ்டம்)
இராது என்று சொல்வதைவிட தோன்றாது என்றே
சொல்லவேண்டும். ஓடி வா க!
உலக நியதியில் நான்! எனதுடன்
செய்யும் எந்த கர்மாவும் புண்ணிய பாபமும்!
ஜனன மரணமும்! ஆகும் என உணர்க.
தெய்வீக நியதியில் எல்லாம் நீயே! உனதென
செய்யும் எந்த கர்மாவும்! ஸத்திய தர்மமாயின்!
மாறி மாறிவரா நித்யமாகிய ஜீவன் முக்திக்கு வழிவகுக்கும்.
ஆகவே?
உலகைக் (ஜீவர்களை) கண்டு கொள்ளாதே. ஆகவே
அவ்வுலகமும் (ஜீவர்களும்) உன்னைக் கண்டு கொள்ளாது.
இவ்வுலகம் உன்னைக் கைவிட்ட மறுவினாடியே
மாயா (ஸ்ரீபகவான்) உன்னை ஏற்றுக்கொள்ளும்.
இதன் விளைவு சீர் வாரிய பணமே ஆகும்.

97



## இதன் சாதனையாவது?

பொறுமையாயிரு! பணிவை ஏற்றுக்கொள்!
சகித்துக் கொள்! விட்டுக் கொடு! எதையும்
நலமே என ஏற்றுக்கொள்! மன்னிக்கப் பழகு!
எல்லோரையும் நல்லவர்களாக நினைக்கப் பழகு!
கருணையும்! கனிவும்! எளிமையும்! வேண்டும்.
இவை அனைத்தும்;
சர்வார்ப்பணம் ஒன்றில்தான்.
முடிவுறும்! நிறைவுறும்! என உணர்க.

குறிப்பு:- உன் சேவையால் இந்த உலகிற்கு பரிவு காட்டினால், அது உன்மேல் பாசத்தைப் பொழியும். அன்பைக் (இறைக்கருணையை) காட்டாது. அது இன்ப துன்பமாய் முடியுமே தவிர சத்திய தர்மமாய் மாறாது என உணர்க.



3

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரும்!

ஸ்ரீ ரமண பகவானும்! அன்பர்களுக்காக கருணையின் நிலையிலும் (உணவு உற்றல்)

தம் பிராரப்தத்தா! வந்த வினை

நோயை! ஏற்றுக்கொண்ட ரகஸ்யம்

பற்றி: ஓர் கேள்வி கேட்கப்பட்டது?????

கேள்வி:— மேலே கூறிய இரு ஸ்ரீ மஹான்களுக்கும்

தொண்டையிலும்! தோள்மேலும்! புற்று

நோய் வந்ததாகவும்; அதை அவர்கள்


ஆனந்தமாக அனுபவித்த நிலையும் பற்றி!

அவ்வேதனையை எவ்வாறு தாங்கிக்

கொண்டார்கள்? அதன் அனுபவ நிலை என்ன?

இதனால் வேறோர்க்கும் சாத்தியமாகுமா?

தாவ வேதனை உண்டா? இல்லையா??



99

பதில்:- கவனம் தேவை. பக்தனே???
ஞானியோ??? அவர்கள் உடலில்!
உள்ளே உள்ளதை! சைத்தன்யமே எனை உணர்த்த.
உடல் என்ற சரீரம்! ஜீரணிக்கப் பட்ட
ஒன்றுகும். வினையே உடல்! உடலே வினை எனை உணர்.
வினை போகமே ஓர் நிரேகம் கண்டாய்.
வினை தான் ஒழிந்தால்; தினைப் போதளவும்
நில்லாது கண்டாய்! என்றனர் அனுபவஞானிகள்.
ஆகவே உடலுக்கு வருவதை தாங்கியே ஆகவேண்டும்.
எனக்கு வந்துவிட்டதே எனப் புலம்பின் அனுமனம் ஆகும்
எல்லாம் நன்மைக்கே என நினைவில் அது அறிவு! ஆகும்.
சரீரம் என்றாலே, இன்பமும் துன்பமும் வந்தே தீரும்.
அதை எனக்கு வந்துவிட்டதே எனப் பாராட்டாமல்,
இது ஸ்ரீ பகவான் கருணையே! வினையைக் கொடுத்து

100




வினையைக் கழிக்கிறோம்! என பொறுமையுடன் ஏற்று: ஆனந்தம் அடைவதே விவேகம் ஆகும்.

கஷ்டம்! துக்கம்! பயம்! அடைவது அவிவேகம் ஆகும்.


இனி விளக்கம் காண்க.

(A) ஸ்ரீ பரமஹம்ஸ தேவர் :- இவருக்கு அன்பர்களின் தீ வினைச்சு வசத்தால் தொண்டையில், புற்று நோய் வந்தது. ஜலம் அருந்த முடியாமலும், எச்சில் விழுங்க முடியாமலும்: கொடும் அவஸ்தையுற்றார். அந்த அவஸ்தையையும், அம்மாவின் (ஸ்ரீ காளியின்) கருணையாக ஆனந்தமாக ஏற்றுக்கொண்டார் (ரசித்துக் கொண்டார்) ஆனால் வெளியுலகிற்கு அவஸ்தைப் படுவது போல் (நடித்துக்) நடந்து காட்டினார். அன்பர்கள் எல்லாம், அவர் அவஸ்தைப் படுகிறார் என்று முழுமையாக நம்பினார்கள்!


குறிப்பு :- உண்மையான பக்தனுக்கும்/ தன்னை உணர்ந்த ஞானிக்கும்! இது கைவந்த கலையாகும் என உணர்க



திறமையாக நடிப்பவனின் நடிப்பு
உண்மையாகவே அனுபவிப்பது போன்று.
நடந்து காட்ட வேண்டும்.
இதில் எம்பிரான்! முதன்மையானவர் ஆம்
கீழே தரும், ஓர் சம்பவத்தை அவருக்காகவா?
உங்களுக்காகவா? எனு நீங்கள் தான்
பதில் சொல்ல வேண்டும்! என உணர்க.
இந்த ஐயை சொல்வாது. சொல்ல இயலாது.
ஸ்ரீபரமஹம்ஸ தேவர்! ஸ்ரீ அன்னையை! வருந்தி
அழைத்தார். ஸ்ரீ அன்னையும் காட்சி தந்தாள்.
ஸ்ரீஸ்வாமிகள்:- அம்மா! அம்மா! அம்மா! அம்மா!
அழுதால் உன்னைப் பெறலாம்! என்ற
ஸத்திய வாக்குக்கு இணங்க, உன் குழந்தையின்
அழுகுரலுக்காக, கருணையோடு காட்சி தரும்
கருணைக்கடலே! கிருபா ஸாகரமே! லோகநாயகி!
சர்வஜீவ தயாபரி! கன்று கூப்பிட்ட (கத்திய)
குரலுக்கு, தாய் (பசு) ஓடிவருவதைப் போன்று,
ஓடிவந்தனைத் தாம் அன்னையே!



உன் கருணை ஒன்றை மட்டும்
பெற்றுவிட்டால் போதுமம்மா! வேறென்ன
வேறு வேண்டிக்கிடக்குதம்மா?
உன் காட்சியும்! உன் கருணையும்!
பெற்றபின் வேறென்ன வேண்டுமம்மா?
உன்னைப் பெறுமல் வேறென்ன பெற்
றாலும்; அது இல்லாததுதானம்மா?
அது மாற்றத்தின் ஏமாற்றம் தானம்மா
எம் அகக்கண்ணுக்கு உன் காட்சியும்!
எம் அறிவுக்கண்ணுக்கு உன் சாட்சியும்!
(ராகத்துவேஷிகள் ஒழிந்த நிலையும்)
போதும்! போதும்! போதும்! போதுமம்மா!
ஸ்ரீ அன்னை எம் ஸ்ரீ பகவானின் வாயைப் பொத்திய
நிலையில்; போதும் கொடுத்தே, போதும்! என்ன
வேண்டும் உனக்கு? எம்மை அழைத்த காரணம்
என்ன தெரிந்தே??? உனக்கு வேண்டியதைக்
கேட்டுப் பெற்றுக்கொள் தெரிந்தே??????
(திரிதப்படுத்திறாள் அன்னை)



(ஸ்ரீ பரமஹம்ஸர் சந்தோஷமாகவே சிரித்து விட்டார்)

ஸ்ரீ ஸ்வாமிகள்:- எனக்கு என்ன வேண்டுமென நீ அறியாததா? யாம் கேட்டுக்கொண்டு நீ கொடுப்பதாக இருந்தால் நீ எம் உண்மைத் தாயல்ல வளர்ப்புத் தாய் ஆகும்.

(A) உண்மைத் தாய்:- மாயாவின் ஸ்ரீ பகவானாகும்.


(B) வளர்ப்புத் தாய்:- உலகத்தாற்காவிகத் தாய் ஆகும்.

ஸ்ரீ அன்னை:- ஓஹோ சாதுர்யமான கொழுந்தே! நீ அது எம்மை அழைத்த காரண காரியத்தைச் சொன்னால்தானே? யாம் ஆவன செய்யமுடியும்?

ஸ்ரீ ஸ்வாமிகள்:- கூவி அழும் பிள்ளைக்குட்டு (தான்) வயிறு நிறையும். தெய்வத்தை கொண்டாடுபவர்க்கே அருள்புரியும் என்ற சத்திய வாக்குக் கிணங்க.

எனக்கு அழத் தான் தெரியும்.

வேறொன்றும் தெரியாது. வென்ற தாய்க்குத்தான்.



அக்குழந்தை அழுவது பசியா??? நோயா???

என உனக்குத்தான் தெரியும்!!!

பசியாக இருந்தால் அமுது கொடு.

நோயாக " மருந்து கொடு.

ஸ்ரீ அன்னை :- அப்பனுக்குப் பிள்ளை தப்பாமல் பொறந்திருக்கு!!! என்ற பழமொழிப்படி உன் அப்பனைப் போல், அடம் பண்ணும் கொழந்தைதான் நீயும். அதுவே அடங்காத புள்ளையை பெற்று உறங்காமல் விழித்திருக்க வேண்டியது நாய் நானே???????????????? என் பசியை யாம் உணர்ந்து கொண்டோம். முணுமுணுத்துக் கொண்டே உனக்கு என்ன தேவை? என்ன செய்கிறது? எதைக் கொடுக்க வேண்டுமோ? என




உணர்ந்து கொண்டோம், எம் செல்வக் கொழுந்தே
உன் தொண்டையில் ஓர் உபாதை
இருக்கிறதும் சரிதானே கொழுந்தே???

ஸ்ரீ ஸ்வாமிகள்:- ஆமாம் அம்மா!

ஸ்ரீ அன்னை:- அதை எம் மாயாவால் இல்லாமல்
செய்து விடலாமா?

ஸ்ரீ ஸ்வாமிகள்:- அம்மா! அம்மா! அப்படி ஒன்றும்
செய்து விடாதே. அது எம் மெய்யன்பர்களின்
சேவையின் பிரசாதமாகும்.
அதை யாம் உண்டுதான்!
அனுபவித்துத்தான் தீர்க்க வேண்டும்.

ஸ்ரீ அன்னை:- அதை இல்லாமல் எம் மாயாவால்
செய்யவும் கூடாது. அதை நீ அனுபவித்தே
தீர்க்கவேண்டுமென்றால், எம்மை அழைத்த
காரணமென்ன கொழுந்தே???




106

ஸ்ரீஸ்வாமிகள்:- எம் மெய்யன்பர்கள் அன்பாக
தரும் சிவ பிரசாதங்களை யாம்
உண்டு அவர்களைத் திருப்திப்படுத்த வேண்டும்.
அவைகளை வாயில் போட முடியவில்லை.
அதற்கு ஏதேனும் வழி உண்டா அம்மா?

அந்த ஸ்ரீஅன்னை அந்த இடமே அதிரும்படி அதி
பவமாகவே சிரித்தாள்.

ஸ்ரீஅன்னை:- இந்தரகஸ்யம் நீ அறியாததல்லவே?
வினையை புசித்தால் பிரசாதம் புசிக்க முடியாது.
பிரசாதம் ,, வினையை ,,
ஏதேனும் ஒன்றைத்தான் நீ புசிக்க முடியும்.
ஒன்று நோயை இல்லாமல் செய்து விடு. அல்லது
(மருந்து விடு)
அவர்கள் தரும் பிரசாதத்தை மறந்து விடு.

ஸ்ரீஸ்வாமிகள்:- அவர்களை திருப்திப்படுத்த
வேறு வழியே இல்லையா அம்மா? என்று ஸ்ரீஸ்வாமிகள்
ஸ்ரீ அன்னையைக் கெஞ்சினார். தாடையைப் பற்றிக் கொண்டு கேட்டார்.







ஸ்ரீ அன்னை:- கொழந்தே! உன் அறிவு மலினம் அடைந்து மனசாக வேண்டாம் இது உலகுக்கு மனம் படைத்தவர்களிடம் மனதால் தான் ஆறுதலும்! தெளிவும்! தரமுடியும். இயலும். அறிவால் ஆறுதலும்! தெளிவும்! தர முடியாது. இயலாது.

ஸ்ரீ ஸ்வாமிகள்:- அப்படியானால் அறிவின் நிலையில் இருந்த வழிதான் என்னமாதா?

ஸ்ரீ அன்னை:- யாம் உன்னை ஒன்று கேட்கிறேன்? உடல் நாமல்ல! அறிவே (ஆத்மாவே) நாம்! என்ற நிலையில்; ஸ்வய அனுபவம் பெற்று வருபவருக்கு/ பரிபூரணத்தன்மையும்! தக்க பக்குவத் தன்மையுமே! அவசியம் வேண்டும் என்பது நீ அறியாததா கொழந்தே?




ஸ்ரீ அன்னை :- மிருதுபரிவுடனும்! கருணையுடனும்!
கனிவுடனும்! இவ்வார்த்தையை சொன்னார்!
பொறுத்துக் கொள்! சகித்துக் கொள்!
எதையும் நுவமே என ஏற்றுக்கொள்!
நீயும் நான் போன்று! அந்தர்யாமிதானே
ஸ்வாந்தர்யாமி! அவருக்கு
உன் அறிவு! பக்குவமாகி வருகிறது எனவே
உன் ஸத்குருவாகிய! ஸ்ரீ போகநாயரி! சொன்ன
நியதியே உன் சாதனையை தொடர்வதாக.
உன் ஸ்ரீ ஸத்குருவாக்கு:-
இந்த ஒரு வாயில்தானே உணவு செல்வதை
மறுக்கிறது? உன் மெய்யன்பர்கள் வாய்!
அனைத்தும்! உன்னுடைய வாய்தான்



## உணர்வோம்

அன்பர்கள் சிவமாக நீயே உணர்கிறாய்.

அப்படி நீ உண்டால் தான் அவர்கள்!

வினைகளையும் நீ ஜீரணிக்க முடியும்.

(அவர்களைத் திருப்பி வருத்தவும் முடியும்) ஆரோக்கிய விளக்கம்.

ஸ்ரீ அன்னையின் வாசகம்:- நீ வினையைப் புசித்தால்

(அவர்களின்) பிரசாதம் புசிக்க முடியாது.

,, பிரசாதத்தை நீ புசிக்க எத்தனித்தால்

,, வினையைப் புசிக்க முடியாது.

ஏதேனும் ஒன்றைத்தான் நீ புசிக்க முடியும்.

ஒன்று நோயை இல்லாமல் செய்து விடு அல்லது

அவர்கள் தரும் பிரசாதத்தை மறந்து விடு.

இதன் உட்கருத்து?

வினை சேர்ந்த நிலை மனதாலும் மனதின் விருத்தி

குணம்: (குணம் என்றால் வாஸனை வாஸனை என்றால் குணம்)


மெய்யன்பர்கள் தரும் நாம ரூப பொருள் எதுவாயினும்






ஓர் ஸ்திர் யார்ப்புடன் அமைவதால்;
சர்வார்ப்பணமுடன் அமைந்தால் தோஷமில்லை
அது குருவின் சரீரத்தை தாக்கும் ஏனென்
ஆ கு வே?

சிறிதளவு (அணுவளவு) பிரசாதத்தை நீ
பிரம்மார்ப்பணமாக உன் வாயால்
போட்டுக் கொண்டு, மீதிருப்பதை உன்அன்பர்
களுக்கு கொடுக்கும் போது, சர்வார்ப்பணமாக
அவர்களை உண்ணச் செய். யோகமாயாவின்
நசுக்கும்
கருணையால், அவ்வினை உன்னைபாதிக்காது.
யோகமாயாவின் கருணையால் அவர்
குருள் உள்ள நீ ! அவர்களாகவே
இருந்து புசித்து வினையை நாசம் செய்து விடலாம்.
வினை சரீரம் அவர்களாகும். உள் இருப்பு நீயாகிய அதுவாகும்.




அவர்கள் கொடுமையை நீ ஏற்றுக் கொண்டு
திருப்தி அவர்கள் மனதை நிறைவு பண்ணும்.
இது மனமகிழ்ச்சியின் மருந்தாகும்
வியாதியை ஏற்க மறுத்து, பிரசாதத்தை நிராஹரித்தால்
அந்த மனம் படைத்தவர்களால் ஏற்க முடியாது. அவர்கள் தரும் பிரசா
தத்தை! ஏற்று அவ்வினைகளை ஜீரணிக்க
இல்லையாயின் ஸ்ரீ குருவாக்கு இருப்பதால்
அர்த்தமில்லாமல் போய் விடும். ஓர் உண்மை
நீ மௌனமாக இருந்தால் வினையின் பாதி
ப்பு உனக்குத் தோன்றும். நீ அறிவாக
மாறு! ஸ்திரமான அவ்வினைகளாக
கூடத் தோன்றாமல் மறையும். முடிவாக
யுவர் சாய்ஸ்! என்றாள் எம் அன்னை!




ஸ்ரீ ஸ்வாமிகள்

நோ சாய்ஸ்! ஓ எம் அன்பின் அன்னையே!
உன் அமுத வாக்குப்படியே அவர்கள் தரும்
பிரசாதங்களே! நீயே! யாமாகவும்
யாமே நீயாகவும் இருந்து ஏற்போம்!
வினைகளே! இருமாயைக்குளன்
கருணையினால்! உண்டு ஜீரணிப்போம்!
மெய்யன்பர்களுக்கு! உதவாது!
உதவ முடியாது! சரீரம்; இருந்தென்ன?
போயென்ன? (யாம் ஓர் சுமைதாங்கிக் கல்தானே
என முடித்துக் கொண்டார் ஸ்ரீபரமஹம்ஸதேவர்.
இதனை உணர்வது:– வினையின் கடுமை!
கொடுமை! எது! எப்படி இருந்தாலும், இறைக்
கருணையின் மாயாவினால்! சுகமாக
சுபமாக! அதிசுலபமாக! அனுபவித்து!
ஜீரணிக்க முடியும் என்பது ஸத்தியமே.





B ஸ்ரீரமண பகவான்:— இவருக்கு கையில்
புற்று நோய் வந்ததாக உணர்கிறோம். அதை
இரண்டு மூன்று முறை ஆப்பரேஷன்!
செய்யும் போதும் மரத்துப்போகும் ஊசி!
போடாமலும்
மயக்க மருந்து உள்ளே கொடுக்காமலும்
அவர் பார்த்துக் கொண்டிருக்கும் போதே!
அறுவை சிகிச்சை! நடந்தது.
அதை (வாக்கியார்த்த வேதனையை)
பொறுத்துக் கொண்டாரா? அல்லது ?
சகித்துக் கொண்டாரா? "
மறந்து விட்டாரா? "
(மாயாவினால்) மறைந்து கொண்டாரா?
அல்லது ஸித்துக்கள் ஏதேனும் செய்து,
அனைவரையும் மயக்கிவிட்டாரா???




ஏனா பலப்பல கேள்விகள் எழுவாம்?

அவர் அனைத் ஏந்துக் கொண்டவர்கு

இவரது ஸ்ரீ ஸத்குரு! திரு அண்ணாமலையாரும்.

உபாசனை மூர்த்தி! ஸ்ரீ அருணாசலேஸ்வரராகும்.

இவர் ஆர் வத் துல் ஜோர் (மூன் ஜன்மா வில்)

யோகி யாக இருந்தவராகும்.

எனை ஸ்ரீ மஹான்கள் திரு

வாக்காக அறிகிறோம் (அநுபக்தீகவந்த யோகமாகும்)

ஆகவே இவரது பக்தியின் காரணமாக, இவரை


பால்யத்திலேயே, ஸ்ரீ அருணாசலேஸ்வரர்!

அழைத்தார். இவர் வந்தார்.

ஸ்ரீ பாதாள லிங்கத்தின் அருகே!

அன்ன, பான! நடத்திடறை! இல்லாமலேயே,

பல காலம்! தியானத்தில் அமர்ந்திருந்தார்.





புலக்கூத்தே வண்டுகள்! இவர் மாம்பழத்தை உண்டு பசியாறி, கடன் தீர்த்துக் கொண்டன.


இவர் யோக வசிஷ்டயார் சரீரஸம்ரக்ஷையற்றிருந்தார்

அதவே உடல் மறந்தப் போணது.

குறிப்பு:- இவர் யோகானந்தத்தையும், அதனால் பெறும், ஸித்திகளையும், விரும்பவில்லை.

மார்க்கம்:- யோகத்தால் மனதை அடக்கி, விசாரஞானத்தால் அடங்கிய மனதை, அழித்து நிலையான (விசாரஞானம்) ஆத்மஞானம் பெற்றவராகும்.

இவை அனைத்தும், அவர் வாக்கால் உணர்ந்த உண்மைகள் ஆகும் என உணர்க.



பின் ஸ்ரீஸ்வாமிகள்! ம ஙு க் கு ணை க ளில்

பால்ய வயதத்தனையும்/ கழித்த

தன்மையாலும் மூ வி ணை க இல க ளே!

அதிகம் உண்ட தன்மையாலும் இவர் உடல்!

வஜ்ர உடல் ஆனது/ எனை உணர்க

குறிப்பு:- கூட்டம் சேர்ந்ததும் உறவு

சுற்றங்களும்! வினைவிதிச்சேர்ந்ததனை.


அதன் பின்னர் ஆஸ்ரமம் உருவானது.

அதன் பின்னர்தான் அன்பர்களால்!

வந்த நோய்க்கு! (அன்பர்களின் உணவு)

அறுவை சிகிச்சை நடத்தது/ எனஅறுக


இவர் உடல் வஜ்ரமாக! இருந்த தன்மையால்.



117


அறுவை சிகிச்சை நேரம்! மயக்க மருந்தும்!
மயக்க ஊசியும். இவர் ஏற்கவில்லை.
அது இவருக்கு தேவையுமில்லை.

ஸ்ரீ அருணாசலேஸ்வரர் மீது இவர் கொண்ட
அபரிமிதமான பக்தி இவருடைய
தூல வினைகளை! பரிபாஹப்படு
த்திவிட்டது. ஸ்ரீ அண்ணமலையார்
உணர்த்திய யோகமும் இவரது மனதை
விசாரஞானமும்! இணைந்ததால், (மனோநாசம்)
முற்றுக்தாக்கு விட்டதென்று சொல்வர்.
இவருடைய உள் ஆழ்ந்த பக்தியை!
இவருடைய அன்பர்கள் வெளிக்கொண்டு
வரவில்லை என்றே சொல்வார்.





இதன் காரணமே யாதெனில், இந்த
திரு அண்ணாமலை அக்கினி சோதி மயமாகவும்
ஞான பூமியாகவும் இருந்தால்,
இவருடைய நான் யார்? என்ற
விசார ஞானத்தை முதலிடமாக கொண்டு
ஞானத்தை துவங்கச் செய்தார்கள்.
பக்தியை மறந்து விட்டார்களோ?
ஆனால் இன்று பக்தி வியாபாரமாகி விட்டது;
என்றே சொல்லலாம்.
இக்கவியில் இத் தருணத்தில் பக்தி
அறிவாமல் அத்வைத ஞானம் பிரகாசிக்காது
என்பது ஆதி ஸ்ரீ மஹான்கள் திருவாக்காக உணர்கிறோம்;
உணர்த்துகிறோம்.



119

மேலே கூறிய இவ்விரண்டையும் { ஸ்ரீ பரமஹம்ஸ தேவர். / ஸ்ரீ ரமண பகவான். }

வைத்து அன்பர்களுக்கு அவன் உணர்த்துவதாவது.

(A) ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸ தேவர் :- கை

ஆண்ட உபாயம் :-

தம் தாவத்தை ஸ்ரீ பகவானின் கைப்பதுமை !

ஆகவும் ; கைக் கருவியாகவும் ; ஆக்கிக்


கொண்டு ; சரீரத்தை அ[illegible]ரிஞப்

(ஜடப்) பொருளாகவும் ; ஆக்கிக்

கொண்ட தன்மையினால் ; ஜீவகர்த்ருத்

வம் நாசமானது. என உணர்க ஆகவே அத்

தாவத்தின் வாழ்! பொறுப்புகள் அனைத்தும்.




120

ஸ்ரீ பகவானின் மாயா ஒதுங்கிக் கொண்டது. சர்வார்ப்பணத்தால்! அவர் மனம் பொறுமையில் பெற்ற திருப்தியின் ஆனந்த ஸாந்தி! ஆனது என உணர்க.

வினையமனம் ஏற்றது. மனதை மாயா ஏற்றது. மாயாவை ஸ்ரீ பகவான் ஏற்றான். ஸ்ரீ பகவானின் ஆன்மா என்ற பரமான்மா (பரம்) ஏற்றது. அங்கு அதுவே நாம்! நாமே அது! என ஒன்றானது.

B ஸ்ரீ ரமண பகவான்: கைஆண்ட உபாயம்: திறல்! கருவிகரணங்களை! தம் யோக பலத் அடக்கியும்; ஜீவிதை காலில் உடலை வஜ்ரம் என ஆக்கியும். தன் உடலை! ஓர் நடமாடும் பிணம் என ஆக்கினார். ஆகவே அவர் உடல் உணர்ச்சியற்ற கட்டை என ஆனது.



மேலே கூறிய இந்நிலை பெற அரிய தேஜஸ்வர்

உபாசனா மூர்த்தியான ஸ்ரீ அருணாசலேஸ்வரர்!

ஆகும் என உணர்க.

ஸ்ரீ ரமண பகவானின் ஸத் குரு தேவரோ!

ஸ்ரீ அண்ணாமலை (யார்) என்ற

ஸ்ரீ பரமகுரு தக்ஷிணாமூர்த்தி!!!

ஆகும் என உணர்க.

திருவும் குருவும்! ஒருங்கிணைந்து

அமைந்த தன்மையினால் விசார ஞானத்தால்!

ஆத்மஞானம் பெற்றதாக அவர்

வாக்காலும் ஸ்ரீ பகவான்கள் திருவாக்காலும்!

உணர்கிறோம். உணர்த்துகிறோம்.

சாராம்சம்:- சர்வார்ப்பணமும்! தற்கவனமும் வேண்டும்

ஜீவகர்த்ருத்வமும்! புறக்கவனமும் வேண்டாம்.


அன்பின் குடில்
எல்லாம் நீ!
Abode of Love
You Are Everything!